DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

| | |
|---|---|
| Case No. | S.C. 129/2022 |
| Deposition of witness for | P.W.1 |
| Name | திரு. ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ் |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2025

Accused produced in PTW.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் வருடம் கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். 20.11.2017 ஆம் தேதியன்று மாலை 15.00 மணியளவில் சிவந்திபட்டி to முடுக்கலான்குளம் செல்லும் ரோட்டில் சிவந்திபட்டி விலக்கில் நானும், சார்பு ஆய்வாளர் மாணிக்கராஜும், முதல்நிலை காவலர் 876 திரு.சரவணமுத்து, மற்றும் பெண் தலைமை காவலர் 628 திருமதி. சித்ரா ஆகியோர்கள் சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது முடுக்கலான்குளத்தை சேர்ந்த ஆஜர்எதிரி சொள்ளமாடன்மகன் பெருமாள்சாமி என்பவர் கையில் பச்சைநிற சிறிய பிளாஸ்டிக் வாளியுடன் வந்தவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை போலீஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரிக்க, அவர் முடுக்கலான்குளத்தை சேர்ந்த சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என பெயர் விலாசம் கூறிய அவர் தான் ஆத்துார் காவல்நிலைய இரட்டை கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாகவும், தனது தற்காப்பிற்காகவும், ஏதேனும் பிரச்சனை ஏற்படும் சமயத்தில் பயன்படுத்த வேண்டியும், 2 நாட்டு வெடிகுண்டுகளை தயார் செய்து வாளியில் வைத்திருப்பதாக கூறி வாளியுடன் 2 நாட்டு வெடிகுண்டுகளையும் ஆஜர் செய்தார். எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் தடை செய்யப்பட்ட நாட்டு வெடிகுண்டுகளை வைத்திருந்த குற்றத்திற்கு மேற்படி எதிரியை கைது செய்தும், அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்து 2 நாட்டு வெடிகுண்டுகளையும் பச்சை நிற பிளாஸ்டிக் வாளியையும் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–1** ஆகும். மேற்படி அத்தாட்சியில்

வெளிநபர்கள் யாரும் கையொப்பமிட முன்வராததால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையொப்பமிட்டு, அத்தாட்சி, சொத்து, எதிரி சகிதம் 16.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 85/2017 சட்டபிரிவு 4(a), 5 வெடிபொருள் தடை சட்டம் 1908 பிரகாரம் வழக்கு பதிவு செய்தேன். நான் தயார் செய்த முதல்தகவல் அறிக்கை என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–2** ஆகும். அத்தாட்சியையும், முதல்தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை மேல்விசாரணைக்காக கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய வட்ட ஆய்வாளர் அவர்களின் விசாரணைக்கு வைத்தேன். மேற்படி சொத்தையும், எதிரியையும் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை 20.11.2017 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

மீண்டும் 06,01,2018 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நானும், கொப்பம்பட்டி காவல்நிலைய முதல்நிலை காவலர் 1987 முருகராஜ் என்பவரும் நிலையத்தில் இருந்தபோது திருநெல்வேலி மாநகர வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் அழித்தல் பிரிவு ஆய்வாளர் திரு.பால்ராஜ் மற்றும் தலைமை காவலர் திரு.சுப்பிரமணியன் உடன் நிலையம் வந்து குற்ற எண். 85/2017 சட்டபிரிவு 4(a). 5 Explosive Substance Act 1908 வழக்கின் சொத்தான 2 நாட்டு வெடிகுண்டுகளை செயலிழக்க செய்வது சம்மந்தமாக குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 கோவில்பட்டி அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவின்பேரிலும், திருநெல்வேலி மாநகர ஆணையர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தபாலின் உத்தரவின்பேரிலும் நிலையம் ஆஜராகி நிலைய பொறுப்பில் இருந்த பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மேற்படி வழக்கின் சொத்தான 2 நாட்டு வெடிகுண்டுகளை நிலையத்திலிருந்து 1 கி.மீ தொலைவில் ஒதுக்குபுறமாக உள்ள கிரவுண்டில் வைத்து 06.01.2018 ஆம் தேதி காலை 10.00 மணி முதல் 11.00 மணிக்குள் என் முன்னிலையிலும், தலைமை காவலர் திரு.முருகராஜ் அவர்கள் முன்னிலையிலும் செயலிழக்க செய்வதற்கு முன்பு 2 நாட்டு வெடிகுண்டுகளை போட்டோ எடுத்துக்கொண்டார்கள். மேலும் வெடிகுண்டுகளை செயலிழக்க செய்வதற்கு முன்பு சுமார் 5 கிராம் எடையுள்ள மண்ணை அந்த இடத்திலிருந்து மாதிரிக்கு எடுத்துக்கொண்டார்கள். பின்னர் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் அழித்தல் பிரிவு ஆய்வாளர் பால்ராஜ் 2 நாட்டுவெடிகுண்டுகளை செயலிழக்க செய்தார். செயலிழக்க செய்தபின்பு மாதிரிக்கு அதை எடுத்து சுமார் 5 கிராம் எடையுள்ள மண்ணை அந்த இடத்திலிருந்து மாதிரிக்கு எடுத்துக்கொண்டார்கள். 2 மாதிரிகளையும் தனித்தனியாக பாலிதீன் கவரில் போட்டு நீதிமன்றம் மூலமாக இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டி கொப்பம்பட்டி காவல்நிலைய முதல்நிலை காவலர் திரு.முருகராஜ் அவர்கள் வசம் ஒப்படைத்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் 10.01.2018 ஆம் தேதி மீண்டும் என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>குறுக்குவிசாரணை இல்லை,</u>**

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

| | |
|---|---|
| Case No. | S.C. 129/2022 |
| Deposition of witness for | P.W.2 |
| Name | திரு. R.மாணிக்கராஜ் |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2025

Accused produced in PTW.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், ஊரக உட்கோட்டம் புதுக்கோட்டை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் வருடம் கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, கடந்த 20.11.2017 ஆம் தேதியன்று மாலை 15.00 மணியளவில் சிவந்திபட்டி to முடுக்கலான்குளம் செல்லும் ரோட்டில் சிவந்திபட்டி விலக்கில் நானும், சார்பு ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ், முதல்நிலை காவலர் 876 திரு.சரவணமுத்து, மற்றும் பெண் தலைமை காவலர் 628 திருமதி. சித்ரா ஆகியோர்கள் சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது முடுக்கலான்குளத்தை சேர்ந்த ஆஜர்எதிரி சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என்பவர் கையில் பச்சைநிற சிறிய பிளாஸ்டிக் வாளியுடன் வந்தவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை போலீஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரிக்க, அவர் முடுக்கலான்குளத்தை சேர்ந்த சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என பெயர் விலாசம் கூறிய அவர் தான் ஆத்தூர் காவல்நிலைய இரட்டை கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாகவும், தனது தற்காப்பிற்காகவும், ஏதேனும் பிரச்சனை ஏற்படும் சமயத்தில் பயன்படுத்த வேண்டியும், 2 நாட்டு கையெறிவெடிகுண்டுகளை தயார் செய்து பச்சைநிற சிறிய பிளாஸ்டிக் வாளியில் வைத்திருப்பதாக கூறி வாளியுடன் 2 நாட்டு வெடிகுண்டுகளையும் ஆஜர் செய்தார். எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் தடை செய்யப்பட்ட நாட்டு வெடிகுண்டுகளை வைத்திருந்த குற்றத்திற்கு மேற்படி எதிரியை சார்பு ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ் கைது செய்ய அவர்களுக்கு உதவியாக இருந்தும், அதே இடத்தில் சார்பு ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ் அவர்கள் தயார் செய்த அத்தாட்சியில் வெளிநபர்கள்

யாரும் கையொப்பமிட முன்வராததால் போலீஸ் பார்ட்டியாகிய நானும், தலைமை பெண் காவலர் 628 திருமதி. சித்ரா, முதல்நிலை காவலர் 876 சரவணமுத்து ஆகியோர்களும் கையொப்பமிட்டோம். பின்பு அத்தாட்சி, சொத்து, எதிரி சகிதம் 16.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 85/2017 சட்டபிரிவு 4(a), 5 வெடிபொருள் தடை சட்டம் 1908 பிரகாரம் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 3** ஆகும். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை 20.11.2017 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>குறுக்குவிசாரணை இல்லை,</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

| | |
|---|---|
| Case No. | S.C. 129/2022 |
| Deposition of witness for | P.W.3 |
| Name | திருமதி. சித்ரா |
| Father's /Husband Name | ... |
| Village | ... |
| Taluk | ... |
| Caste | ... |
| Calling | ... |
| Religion | ... |
| Age | ... |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2025

Accused produced in PTW.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017 ஆம் வருடம் கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது, கடந்த 20.11.2017 ஆம் தேதியன்று 15.00 மணியளவில் சிவந்திபட்டி to முடுக்கலான்குளம் செல்லும் ரோட்டில் சிவந்திபட்டி விலக்கில் நானும், சார்பு ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ், சார்பு ஆய்வாளர் மாணிக்கராஜ், முதல்நிலை காவலர் 876 திரு.சரவணமுத்து, ஆகியோர்கள் சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது முடுக்கலான்குளத்தை சேர்ந்த ஆஜர்எதிரி சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என்பவர் கையில் பச்சைநிற சிறிய பிளாஸ்டிக் வாளியுடன் வந்தவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை போலீஸ் பார்ட்டி சகிதம் மடக்கி பிடித்து விசாரிக்க, அவர் முடுக்கலான்குளத்தை சேர்ந்த சொள்ளமாடன் மகன் பெருமாள்சாமி என பெயர் விலாசம் கூறிய அவர் தான் தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் காவல்நிலைய இரட்டை கொலை வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாகவும், தனது தற்காப்பிற்காகவும், ஏதேனும் பிரச்சனை ஏற்படும் சமயத்தில் பயன்படுத்த வேண்டியும், 2 நாட்டு வெடிகுண்டுகளை தயார் செய்து பச்சைநிற சிறிய பிளாஸ்டிக் வாளியில் வைத்திருப்பதாக கூறி வாளியுடன் 2 நாட்டு வெடிகுண்டுகளையும் ஆஜர் செய்தார். எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் தடை செய்யப்பட்ட நாட்டு வெடிகுண்டுகளை தயார் செய்து வைத்திருந்த குற்றத்திற்கு மேற்படி எதிரியை சார்பு ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ் கைது செய்து அதே இடத்தில் சொத்துக்களை அத்தாட்சி மூலம் கைப்பற்றியும், மேற்படி அத்தாட்சியில் வெளிநபர்கள் யாரும் கையொப்பமிட முன்வராததால் போலீஸ் பார்ட்டியாகிய நானும், சார்பு ஆய்வாளர்

மாணிக்கராஜும், முதல்நிலை காவலர் 876 சரவணமுத்து ஆகியோர்களும் கையொப்பமிட்டோம். பின்பு அத்தாட்சி, சொத்து, எதிரி சகிதம் 16.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 85/2017 சட்டபிரிவு 4(a), 5 வெடிபொருள் தடை சட்டம் 1908 பிரகாரம் வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் ஆர்தர் ஜஸ்டின் சாமுவேல்ராஜ் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். அத்தாட்சியில் உள்ள மூன்றாவது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ– 4** ஆகும். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை 20.11.2017 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>குறுக்குவிசாரணை இல்லை,</u>